புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

=====================================================================

# அகநானூற்றில் நெய்தல் நில மக்களின் பண்பாட்டுக் கூறுகள்

ஆய்வாளர்: க. ஜினிமோள்
பதிவு எண் : 21113114022035
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி,
மார்த்தாண்டம் – 629165.
மனோன்மணியம் சுந்தரனார்
பல்கலைக்கழகம்,
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி – 627012

நெறியாளர்: சா.மேகலின் சந்திரா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி,
மார்த்தாண்டம் -629165
மனோன்மணியம் சுந்தரனார்
பல்கலைக்கழகம்,
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி – 627012

=====================================================================

ஆய்வுச் சுருக்கம்:

எட்டுத் தொகை நூல்களில் ஒன்றான அகநானூறு மக்களின் வாழ்வியலை எடுத்தியம்பும் பெட்டகமாக விளங்குகிறது. அவ்வகையில் ஐவகை நிலத்தின் கூறுகளையும் அழகுற எடுத்துக் கூறும் அகநானூறு நெய்தல் நில மக்களின் பண்பாட்டுக் கூறுகளை மிகவும் தெளிவாக புலப்படுத்துகின்றது. நெய்தல் நிலத்து மக்களின் வாழ்க்கையானது கடலும் கடல் சார்ந்த பகுதியான பட்டினம், பாக்கம் என்ற இடங்களில் காணப்படுகின்றது. நிலப்பகுதி முழுவதும் மணற்பரப்பாக இருந்ததால் நெல் முதலிய தானியங்களை விளைவிக்க முடியவில்லை. ஆகவே கடலினை நம்பி அவர்களது வாழ்க்கையானது காணப்பட்டது. கடலிலிருந்து கிடைக்கின்ற மீன், சிப்பி, முத்து, உப்பு போன்றவை அவர்களின் வாழ்வினை வளப்படுத்தியது. இவர்களின் இல்லமானது குடில்கள் என்ற அமைப்பினைப் பெற்றுக் காணப்படுகின்றது. இக்குடிசையானது மூங்கில்,வஞ்சி,காஞ்சி போன்ற மரங்களால் அமைக்கப்பட்டு காணப்பட்டது. இவர்கள் வாழ்க்கை நடத்தியப் பகுதிகளில் வாணிக நோக்கத்துடன் துறைமுகங்கள் அமைக்கப்பட்டு பண்டமாற்று முறைகளை ஏற்படுத்தி வாழ்க்கையை வளப்படுத்தினர். குடிசைகளில் வாழ்ந்தாலும் செல்வச் செழிப்பாக வாழ்ந்தவர்கள் நெய்தல் நிலமக்கள். இங்கு வாணிபம் வளர்ச்சியுற்றதால் துறைமுகப்பட்டினங்கள் வளர்ச்சியினை பெற்றன. இவர்களின் தொழிலாக மீன்பிடித்தல், கொடுஞ்சுறா வேட்டை, உப்பு விளைவித்தல், உப்பு விற்றல், (சங்கும் முத்தும் எடுத்தல்) முத்து குளித்தல், என பலவகையான தொழில்களைச் செய்து தங்களின் உடல் உழைப்பினால் வாழ்வில் உயர்ந்த நிலையினை அடைந்தனர். நெய்தல் நில மக்கள் தங்களின் களைப்பினைப் போக்க அனைவரும் சேர்ந்து பல வகையான விளையாட்டுகளை விளையாடி மகிழ்ந்தனர். நண்டுபிடித்தல், ஊஞ்சல் ஆடுதல், குரவை கூத்தாடுதல் போன்ற பொழுதுபோக்கு நிகழ்வுகளை நடத்தி மகிழ்ந்திருந்தனர். நெய்தல் நிலத்தில் வாழும் மக்களின் திருமண முறையானது மற்ற நிலத்து மக்களின் மணமுறையினை விட வேறுபட்டது. ஒரு ஆண் தான் விரும்பிய பெண்ணை மணக்க அனேக பொருட்களை திரட்ட வேண்டியுள்ளது. நெய்தல் நிலத்தில் வாழ்ந்த மகளிர் உடல் உழைப்பினால் ஆண்களுக்கு நிகராக தங்கள் வாழ்க்கையினை வாழ்ந்து வந்தனர். தங்களின் மக்களைப் பாதுகாக்கவும் மனையினை வளர்ச்சியின் பாதையில் கொண்டு செல்வதற்கும் மீன்விற்றல், உப்பு விற்றல் போன்ற தொழில்களில் ஈடுபட்டு வளர்ச்சி அடைந்தனர். இவ்வாறாக நெய்தல் நிலத்து மக்களின் பண்பாட்டுக் கூறுகள் காணப்படுகிறது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முன்னுரை:

பண்பாடு பழக்கவழக்கங்களோடு தொடர்புடைய ஒரு வாழ்க்கை முறை ஆகும். பண்பாடு என்பது பண்பட்ட பக்குவப்பட்ட சீரான நேரிய வழியில் செல்லும் ஒழுக்கம் ஆகும்.

*ஆங்கிலத்தில் இதனை 'culture' என்று சொல்லுவர். பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும் மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும் பழக்கவழக்கங்களுக்கும் அடங்கிய முழுமைத்தொகுதியாகும் என எட்வர்ட் பர்னட் டைலர் குறிப்பிடுகிறார்.*

*பண்பாடு என்பது மக்களால் ஆக்கப்பெற்ற கருவி, அந்த ஊடகத்தைக் கொண்டே மக்கள் தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றனர். அவ்வகையில் நெய்தல் நிலத்து மக்களின் பண்பாட்டுக் கூறுகளை இக்கட்டுரை ஆராய்கிறது.*

*நெய்தல் நில மக்களின் வாழ்க்கை:*

*கடலும் கடல் சார்ந்த பகுதியுமான நெய்தல் நிலத்தில் பட்டினம், பாக்கம் என்ற இடங்களில் மக்கள் வாழ்ந்து வந்தார்கள். இம்மக்கள் பரதவர் என்றும் பட்டினவர் என்றும் அழைக்கப்பட்டனர். நிலப்பகுதி முழுவதும் மணற்பரப்பாக இருந்ததால் நெல் முதலிய தானியங்களை விளைவிக்க முடியவில்லை. ஆகவே இம்மக்கள் கட்டுமரம், படகு போன்றவற்றைப் பயன்படுத்தி மீன் பிடிக்க தொடங்கினர். தனது தேவைகளுக்கு பயன்படுத்தியது போக மீதமுள்ள மீன்களை விற்று தங்கள் வாழ்க்கையினை நடத்தினர். கடலில் கிடைத்த சுறா, இறா, திருக்கை போன்ற விலையுயர்ந்த மீன்களை அயல் ஊர்களில் கொண்டு சென்று விற்பனை செய்து தங்களுக்கு தேவையான அரிசி முதலான தானியத்தைப் பெற்றுக் கொண்டனர். விற்பனை செய்து எஞ்சிய மீன்களை உப்பிட்டுப் பதப்படுத்தி கருவாடு செய்து உண்டனர்.*

*"பெருநீர் அழுவத்து எந்தன் தந்த*
*கொழுமீன் உணங்கற் படுபுள் ஒப்பி*
*அக்கர்ப் புன்னை இன்நிழல் அசை இ"*

*[அகநானூறு 20-1-3]*

*என்னும் பாடல்களிலிருந்து மீன் உணக்கும் பணியினைப் பெண்கள் செய்தனர் என்பது புலப்படுகின்றது.*

*நெய்தல் நில மக்களின் குடில்கள்:*

*பரதவர் குடிலினை நேரில் காண்பது போல் காட்டியுள்ளார் புலவர்.*

*"நிலவின் இலக்கு மணல் மலி மறு இல்*
*புலால் அம் சேரிப், புல்வேய் குரம்பை"*

*[அகநானூறு 200:1-2]*

*மூங்கில் கோல்களை வரிசையாகச் சார்த்தி வஞ்சி, காஞ்சி ஆகிய மரங்களின் வெண்மையானக் கொம்புகளை இடையிடையே விரவிப் பொருத்தி தாழை நாரினைக் கொண்டு கட்டி மேலே தருப்பைப் புல் வேய்ந்த தாழ்வாரம் அமைந்ததாகக் காணப்பட்டது நெய்தல் நில மக்களின் குடிசை வீடு. அவ்வீட்டில் ஓலையினால் செய்த பறி தொங்கிக் கொண்டிருக்கும். குடிசையினைச் சுற்றி சுரைப் போன்ற கொடிகள் படர்ந்து காய்கள் காணப்படும். இவ்வாறு இயற்கை அழகுடன் காட்சி அளிக்கின்றது நெய்தல் நிலம்.*

*துறைமுகம்:*

*கடற்கரைப் பகுதிகளைச் சுற்றி துறைமுகங்கள் அமைந்திருந்தன. கடல் வழியாக அயல் நாடுகளுடன் வாணிகம் நடைபெற்றது. தமிழகத்து மிளகு, நறுமணப் பொருட்கள், முத்துக்கள் போன்றவற்றுக்கு ஈடாகப் பொன்னையும், மதுவையும் பண்டமாற்றாகப் பெற்றுச் செல்ல கிரேக்கர்கள் மரக்கலங்களில் வந்துச் சென்றதை பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. நெய்தல் நில மக்கள் குடிசைகளில் வாழ்ந்தாலும் செல்வச் செழிப்பாக வாழ்ந்தனர். வாணிபம் வளர்ச்சியுற்றதால் துறைமுகப்பட்டினங்கள் நகரங்கள் வளர்ச்சி பெற்றன.*

*சங்க இலக்கியம் பெருமைப்படுத்திக் கூறும் மருங்கூர்ப்பட்டினம் நெய்தல் நிலப்பரப்பில் இருந்தது என்பதனை,*

*"விழுநிதி துஞ்சும் வீறுபெறு திருநகர்*
*இருங்கழிப் படப்பை மருங்கூர்ப்பட்டினத்து"*
*[அகநானூறு 227:19-20]*

*எனும் பாடல் வரி வாயிலாக அறியலாம்.*

*தொழில்:*

*உழைப்பின்றி உயர்வு இல்லை என்னும் சொற்களுக்கு உண்மையாக வாழ்ந்தவர்கள் நெய்தல் நில மக்கள ஆவர். தொழில் என்பது ஒருவருடைய வாழ்வாதாரத்திற்கு வருமானம் ஈட்டக்கூடிய செயலாகும். வேலை என்பது பணம் சம்பாதிப்பதற்காக செய்யும் செயல் அல்லது குறிப்பிட்ட சேவையை வழங்கும் செயல் என கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி தொழில் என்பதற்கு விளக்கம் அளிக்கின்றது. அந்த வகையில் நெய்தல் நில மக்கள் தங்களின் வாழ்வினை வளப்படுத்துவதற்கு பலவகைத் தொழில்களைச் செய்தனர்.*

*மீன் பிடித்தல்:*

*பழங்கால மக்கள் முதல் இக்கால மக்கள் வரையிலும் அனைவராலும் விரும்பி உண்ணப்படும் உணவாக மீன் காணப்படுகிறது. இத்தொழிலை நெய்தல் நில மக்கள் பரம்பரை பரம்பரையாக இன்றும் செய்து வருகின்றனர். இவர்களை பரதவர் என்று அழைப்பர். இப்பரதவர்கள் கடல் அலையின் தன்மை, காற்று, வெப்பநிலை இவற்றிற்கேற்ப இரவு, பகல் என பாராமல் கடலுக்குள் மீன் பிடிக்க செல்வர். இவ்வாறு பிடிக்கப்படும் மீன்கள் இக்காலத்திலும் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. இத்தகைய மீன்பிடித் தொழில் மிகுந்த வருமானத்தை அளிப்பதாகவும் விளங்குகின்றது.*

*உப்பு விளைவித்தல்:*

*மழையை எதிர் நோக்காமல் வாழும் ஒரு கூட்டம் உண்டு என்றால் அது நெய்தல் நில பரதவர் கூட்டமாகும். நெய்தல் நில மக்கள் உப்பு விளைவித்து அதை பலவிடங்குகளுக்கு கொண்டு சென்று விற்பர். பெரிய கடலில் மீன் பிடிக்கும் தொழிலையுடைய சிறிய குடிசையில் வாழும் பரதவ மக்கள் பெரிய உப்பங்கழியாகிய வயலிலே வெண்ணிறக் கல் உப்பினை உழாமலேயே விளைவிப்பர். இதனை,*

*"பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்*
*இருங்கழிச் செறுவின் உழா அது செய்த*
*வெண்கல் உப்பின் கொள்ளை சுற்றி"*
*[அகநானூறு 140: 1-3]*

*என்ற அகநானூற்று பாடல்வரியானது உப்பங்கழிப்பற்றியச் செய்தியினைக் குறிப்பிடுகின்றது.*

*உப்பு விற்றல்:*

*பரதவ மக்கள் உப்பினை விளைவித்து அதனைப் பிற இடங்களுக்குக் கொண்டுச் சென்று விற்பர். இவர்களை உமணர் என்று அழைத்தனர்.*

*உமணர்கள் இளைய எருதுகள் பூட்டிய வண்டியில் உப்பினை ஏற்றி விற்பனைக்குச் செல்லுவர். அப்போது அவ்வண்டிக்கு இடையூறு ஒன்றும் வராமல் இருக்க அச்சு மரத்தின் கண்ணே காவலாகிய அச்சைக் கட்டியிருப்பர். இதனை,*

*"எருது இளைய நுகம் உணரவே*
*சகடம் பண்டம் பெரிது பெய்தன்றே*
*……………………………………………….*
*அவனது அறியுதர் யார்? என உமணர்*
*கீழ்மரத்து யாத்த சேமஅச்சு அன்ன"*
*[புறநானூறு 102: 1-5]*

*என்ற புறநானூற்று பாடல் வரி வழியாக அறியலாம்.*

*பெரிய உப்பங்கழிகளைக் கொண்ட துறைமுகத்தில் உப்பினைக் கூட்டமாகக் கொட்டி விற்கின்றனர், என்பதனை,*

*"உழைக்கடல் வழங்கலும் உரியன அதன் தலை*
*இருங்களிப் புகா அர் பொருந்தத் தாக்கி"*

*[அகநானூறு 190:10-11]*

*என்னும் பாடல் வரிகள் புலப்படுத்துகின்றது.*

*சங்கும் முத்தும் எடுத்தல்:*

*பரதவர் மீன்பிடித்தலையே தலையாயத் தொழிலாகக் கொண்டிருந்தனர். மீன் வேட்டையாடுதலோடு மட்டும் நின்றுவிடாமல் ஆழ்கடலில் மூழ்கி முத்துக்களையும், சங்குகளையும் எடுக்கும் தொழிலையும் மேற்கொண்டனர். அளவு கடந்து கிடைத்த முத்துச் சிப்பிகளையும், சங்குகளையும் கரைக்குக் கொண்டு வந்து, அவற்றை பங்கிட்டு விற்று செல்வங்கொழித்து வாழ்ந்து வந்தனர். இதனை,*

*கண்திரள் முத்தம் கொண்டு ஞாங்கர்த்*
*தேன் இமிர் அகான்கரைப் பகுக்கும்*
*கானல் அம் பெருந்துறைப் பரதவன்".*

*[அகநானூறு 280:12-14]*

*மேலும் பெரிய படகினையுடைய பரதவர்கள் கடலில் கொல்லும் தன்மையுடைய சுறா மீனை ஒதுக்கிவிட்டு நீருள் மூழ்கி வலம்புரி சங்கினை எடுப்பர்.*

*"இலங்கு இரும் பரப்பின் எரிசுறா நீக்கி*
*வலம்புரி மூழ்கிய வான்திமிற் பரதவர்*

*[அகநானூறு 350:10-11]*

*என்னும் பாடல் வரிகள் மெய்ப்பிக்கின்றன.*

*நெய்தல் நில மகளீர்:*

*மீனவர்களில் கணவன் மனைவியாகிய இருவருமே உழைத்துண்பர். கணவனையும் மக்களையும், மனையையும் போற்றிக் காப்பதோடு தாமும் உழைத்துப் பொருள் திரட்டி வாழ்வதிலேயே கண்ணுங்கருத்துமாயிருப்பவர்கள் பரதவ குடி மகளீர். பரதவர் பிடித்து வரும் மீனைத் தலைச் சுமையாகத் தூக்கிச் சென்று அங்காடியில் விற்று வருவது பெரு வழக்கமாயுள்ளது.*

*ஓங்கியுயர்ந்த அலைகடலில் படகில் சென்று தம் தமையன்மார் கொண்டு வந்த பெரிய மீன்களை செல்வமிக்க தங்கைமார் விழாக்கள் நடக்கும் தெருக்களில் கொண்டு சென்று விலை கூறி விற்பர். இதனை*

*"ஓங்குதிரைப் பரப்பின் வாங்கு விசைக் கொள் இ*
*திமிலோன் தந்த கடுங்கண் வயமீன்*
*தழைஅணி அல்குல் செல்வத் தங்கையர்*
*விழவு அயர் மறுகின் விலை எனப்பகரும்"*

*[அகநானூறு 320:1-4]*

*என்னும் பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன.*

*அதுமட்டுமின்றி மகளிர் உப்பு விற்கும் தொழிலிலும் முனைப்புடன் செயல்பட்டனர். ஊர் ஊராகக் கொண்டு சென்று உப்பினை விற்கும் காதல் மடமகள் தெருத்தெருவாகச் சுற்றி விலைக் கூறி விற்பாள். இவ்வாறு இடம் பெயரும் போது உமணர் பெண்கள் உப்பு ஏற்றிய வண்டியை ஓட்டி செல்லுதல் உண்டு. இதனை,*

*கதழ்கோல் உமணர் காதல் மடமகள்*
*சில்கோல் நேர வெண்கல் உப்பு எனச்*
*சேரி விலை மாறு கூறலின்"*

*[அகநானூறு 140:5-8]*

*என்னும் பாடல் வாயிலாக கண்டு கொள்ள முடிகின்றது.*

பண்டமாற்று முறை:

சங்க காலத்திலேயே வாழ்ந்த தமிழர்கள் அன்றாட தேவையான அரிசி பருப்பு, உப்பு, பால், தயிர்,மீன், இறைச்சி, முதலானப் பொருட்களை காசு கொடுத்து வாங்காமல் பண்டமாற்று செய்து கொண்டனர். உணவிற்கு சுவை தரும் உப்பினைக் கொடுத்து அதற்கு ஈடாக அந்நிலத்தில் விளையும் பொருட்களை பண்டமாற்ற முறையில் பெற்றனர்.

"நெடுந்திமில் தொழிலோடு வைகிய தந்தைக்கு
உப்பு நெடை நெல்லின் மூரண்வெனர் சோறு
அயிலை துழந்த அம்புளிச் சொரிந்து"

[அகநானூறு 60: 3-5]

என்னும் பாடல் வரியானது மீன் பிடித்து களைத்து வரும் தந்தைக்கு நெல்லால் ஆகிய வெண் சோற்றினை மகள் கொடுக்கின்ற செய்தியினைக் காணமுடிகிறது.

நெய்தல் நில மக்களின் விளையாட்டு:

பரதவ மகளிர் புன்னை மர நிழலில் தங்கி மீன் வாற்றலைக் கவர வரும் பறவைகளை விரட்டுவதோடு மட்டுமல்லாமல் சிவந்த நண்டுகள் வாழும் ஆழமான வளைகளைத் தோண்டுவர். வளைந்த கழிகளில் இருக்கும் தாழையின் விழுதுகளாலான ஞாழல் மரத்தின் உயர்ந்த கிளையிற் கட்டிய ஊஞ்சலில் ஆடுவார்கள். கீழ்க்காற்றுக் கொண்டு குவித்த மணலில் குரவைக் கூத்தாடுவார்கள். சுற்றத்தாரோடு கூடிக் கடல் நீரிலும் கரையிலும் விளையாடுவார்கள். அழகிய பூக்களோடு மேவிய பசுமையான தாழையுடையை உடுத்திக் கொண்டு பலவித பூக்களையுடைய கடற்கரைச் சோலையில் தங்குவார்கள். இதனை

"செக்கர் ஞென்டின் குண்டு அளை கெண்பி
ஞாழல் ஓங்கு சினைத் தொடுத்த கொடுங்கழித்
தாழை விழ் கயிற்று ஊசல் தூங்கி
………………………………………………………………….
பல்பூங் காணல் அல்கினம் வருதல்"

[அகநானூறு 20: 4-10]

மணமுறை:

பரதவ மரபில் ஆண்மகன் தான் விரும்பும் கன்னியை மணப்பதெனில் பரிசமாக பொன்னும் திரண்ட பொருளும் அளவற்ற அணிகலன்களும் கொடுக்க வேண்டும்.

"பொன் அடர்ந் தன்ன ஒளிணர்ச் செருத்திப்
பன்மலர் வேய்ந்த நலம்பெறு கோதையர்
…………………………………………………………..
ஆசையினள் இருந்த ஆய்தொடிக்குறு மகள்"

[அகநானூறு 280: 1-4]

என்னும் பாடலானது பரதவ ஆடவன் ஒருவன் தான் விரும்பிய மங்கை ஒருத்தியை மணம் முடிப்பதற்காக கடினமான வினையினைக் கூடச் செய்து வெற்றி பெறுகின்றான். இதன் மூலமாக தனது காதலின் வலிமையினை அறிய முடிகின்றது.

தொகுப்புரை:

இவ்வாறாக நெய்தல் நிலத்தில் வாழ்ந்த மக்கள் பண்பாட்டினை பேணி பாதுகாத்தனர் என்பதையும் கடலும் கடல் சார்ந்த பகுதிகளில் வாழ்ந்த இம்மக்கள் கடலிலிருந்து கிடைக்கப் பெற்ற உணவு பொருட்களை மையமாகக் கொண்டே தங்களின் வாழ்க்கையினை வளப் படுத்தினர். இம்மக்கள் குடிசையினை மூங்கில், காஞ்சி, வஞ்சி போன்ற மரங்களால் அமைந்திருந்தனர். கடலிலிருந்து கிடைக்கப் பெற்ற பொருட்களை பண்டமாற்று முறையினைச் செய்து மாற்று உணவுப் பொருட்களை பெற்றுக் கொண்டனர் என்பதை காண முடிந்தது. இவர்கள் மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல், உப்பு விற்றல், முத்து குளித்தல் என பல தொழில்களைச் செய்து வாழ்வில் முன்னேற்றம் கண்டனர். அவர்களுக்கு நிகராகப் பெண்களும்

*உடல் உழைப்பில் ஈடுபட்டனர். இவர்களின் பொழுதுபோக்காக நண்டுபிடித்தல், ஊஞ்சல் ஆடுதல், குரவைக் கூத்தாடுதல் போன்றவை அமைந்திருந்தன. இவர்கள் மணமுறையும் மற்ற மணமுறையினை விட வேறுபட்டது என்பனப் போன்றச் செய்திகளை அகநானூற்றில் நெய்தல் நில மக்களின் பண்பாட்டுக்கூறுகள் என்ற இக்கட்டுரையின் வாயிலாகப் புலனாகிறது.*

*துணைநூற்பட்டியல்:*


| | | |
|---|---|---|
| *1.* | *அகநானுறு* | *புலியூர்தேசிகன் உரை, செப்டம்பர் 2010, சென்னை - 600 002* |
| *2.* | *கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி* | *வெஸ்ட் புக்ஸ், மெட்ராஸ் (பி)லிட், 62-4, ஆர்ம்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம் - 600010* |
| *3.* | *தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும்* | *டாக்டர்.கே.கே. பிள்ளை 2002, உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600113* |
| *4.* | *நற்றிணை* | *ஔவை துரைசாமிப் பிள்ளை முதற்பதிப்பு 2016, சாரதா பதிப்பகம், சென்னை 600 014* |
| *5.* | *பண்பாட்டு மானுடவியல்,* | *பக்தவத்ஸல பாரதி, 2009, புதுச்சேரி மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் – 608 001* |
| *6.* | *புறநானூறு,* | *பாலையன், ஜூலை 2008, சாரதா பதிப்பகம் ஜி-பு சாந்தி அருக்ககம், ராயப்பேட்டை, சென்னை 600014* |
| *7.* | *நற்றிணை* | *ஔவை துரைசாமிப் பிள்ளை முதற்பதிப்பு 2016, சாரதா பதிப்பகம், சென்னை 600 014* |


********* ********* ********** ********* ********* ********** ********** **********